Y.M.C.A

# மன்னார், சிலாவத்துறை முகாம்கள்மீது புலிகளின் கடும் தாக்குதல் தொடர்கிறது

மன்னார் மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம்கள் மீது நேற்று முன் தினமிரவு முதல் விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை நடாத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது சிலாவத்துறை, முகாம் கடும் தாக்குதலுக்குள்ளாகி இருப்பதாகவும் தள்ளாடி முகாம் மீது விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க நேற்றுத் தெரிவித்தார். இது வரை மோதல்களில் 5 இராணுவ சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் 41 பேர் காயமடைந்ததாகவும் அவர் கூறினார். முகாம்கள் மீதுபுலிகள்பசிலன்ஷெல்களை ஏவியதாகவும் குறிப்பிட்ட ரணதுங்க மோதல் விவரம் எதுவும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார் சிலாவத்துறை முகாம் சுற்றாடலில் 19சிங்கள மீனவ குடியேற்ற வாசிகளும் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. முகாம்உட்பகுதியில் தொடர்ந்து மோதல் நடப்பதாகப் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 114 பிரமோதூத பங்குனி 07 (21-03-1991) வியாழன்

## முத்திரைச் சந்தையில் பிற்பொக்கற்காரர்

நல்லூர் முத்திரைச்சந்தைப் பகுதியில் "பிற்பொக்கற்" பாணியிலான திருட்டுக்கள் சமீப நாட்களாக அதிகரித்துள்ளமை தெரியவருகிறது.

கடந்த திங்கட்கிழமை மாலைகொழும்புக்குச் செல்வதற்காக இங்கு வந்த இரு பெண்களின் கைப்பைகளில் இருந்த 5000 ரூபாவுக்கும் மேற்பட்டபணம்கொள்ளை யடிக்கப்பட்டுள்ளது.

பஸ்களில் பிரயாணிகள் நெருக்கடியாக ஏறும்போது சிலதிருடர்கள் இவ்வாறாக பிற்பொக்கற் அடித்து விட்டு தலைமறைவாகி விடுகின்றனர் எனத் தெரிவருகிறது.

முத்திரைச் சந்தையில் சிலர் காலை முதல் மாலை வரை அவசியமின்றி நிற்பதாகவும். தமது உறவினரை அனுப்ப வந்தது, கூட்டிப்போக வந்தது என்ற சாட்டுச் கூறி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

● வலைப்பாட்டில் இருந்து இரணைதீவு நோக்கிச்சென்ற

# பயணிகள் படகுமீது தாக்குதல்

# 43 பேரைக் காணவில்லை!

## பூநகரிக் கடலில் செவ்வாய் இரவு பயங்கரம்

பூநகரி கடற்பகுதியில் நேற்று முன்தினம் ஒரு படகில் பயணம் செய்த 43 பொதுமக்கள் படையினரின் தாக்குதலையடுத்து காணாமல் போனதாக அஞ்சப்படுகிறது.

35 ஆண்களும், 5 பெண்களும், 3 சிறுவர்களும் கொண்ட இக்குழுவினர் செவ்வாய் இரவு 9 மணியளவில் வலைப்பாடு கிராமத்தில் இருந்து இரணைதீவு நோக்கிப் புறப்பட்டதாகவும் அரை மணி நேரத்தில் கடலில் தொடர்ந்து வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும் ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பயணிகள் உரிய இடத்தைச் சென்றடையவில்லை. இவர்களுக்கு என்ன நடந்தது என்பது அச்சுக்குப் போகும் வரை தெரியவில்லை.

கடந்த சில தினங்களாக இப்பகுதியில் கடற்படையினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (71)

## அவசரகாலச்சட்ட விவாதம்

# சம்பந்தப்பட்ட தரப்பினருடன்

## மன்னிப்புச்சபை உறுப்பினர்கள் இலங்கை வர அனுமதி

சர்வதேச மன்னிப்புச்சபை பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு வர அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அண்மையில் இலங்கை வந்து சென்ற இரு மன்னிப்புச்சபை அதிகாரிகளுடன் நடத்த பேச்சைத் தொடர்ந்து அரசு இவ்வனுமதியை வழங்கியது.

சர்வதேச மன்னிப்புச்சபை

—04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் பெரியாஸ்பத்திரியில் ஆண் பிரசவித்த அதிசயம்!

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் 32 வயதுடைய ஆண் ஒருவர் ஆண் குழந்தையைப் பிரசவித்த அதிசயச் சம்பவம்

## ஒரு மாணவனுக்கு 5 கொப்பிகள்

ஒரு மாணவனுக்கு ஐந்து பயிற்சிக் கொப்பிகள் வீதம் இரண்டு இலட்சம் கொப்பிகளை வடபகுதிக்கு எடுத்து வந்து மாணவர்களுக்கு கொழும்பு விலையிலேயே வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக்கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம்தெரிவித்துள்ளார். (32)

## கல்லூரி மாணவர்கள் இரத்ததானம்

யாழ் நகரில் உள்ள மூன்று பாடசாலைகளின் மாணவ மாணவிகள் நேற்று யாழ் வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தனர். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி மாணவ மாணவிகளே இரத்த தானம் செய்தனர். (71)

## போக்குவரத்து பாதிப்பு

மன்னார் மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தாக்குதலை அடுத்து யாழ் மாவட்டத்திலிருந்து கொழும்பு செல்லும் பயணிகளின் போக்குவரத்து நேற்று பாதிப்படைந்தது.

முத்திரைச் சந்தியில் காத்திருந்த பலர் நேற்றும் பிற

## சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சை ஆரம்பிக்குமாறு சுதந்திரகட்சி

அவசர காலச்சட்ட விவாதம் நேற்றுப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்ட அநேக எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இனப்பிரச்சினைக்கு உடனடியாக அரசு தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தினர்.

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சம்பந்தப்பட்ட தரப்புடன் அரசு பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பியான கே. பி.ரட்ணாயக்கா நேற்றுச் சபையில் குறிப்பிட்டார்.

உப சபாநாயகர் கமிலி பொன்சேகா அரசியல் தலைவர்கள் தமது பாதுகாப்புக் குறித்துச் சிந்திக்காமல் மக்கள் குறித்தும் சிந்திக்க வேண்டும் என்றார்.

## பிரட்மன் மீண்டும் கூறுகிறார்

## விடுதலைப்புலிகளுடன் அரசு பேசவில்லை தலைவர் பிரபாகரனே கலந்து கொள்ள வேண்டும்

ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் எந்தவித பேச்சுவார்த்தைகளையும் இப்போது நடத்தவில்லை என ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் மறுத்துள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பிரட்மன் இந்த மறுப்பை வெளியிட்டார். அரசு விதித்துள்ள நிபந்தனைப்படியே பேச்சு நடக்கும் எனக் கூறிய பிரட்மன், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உடன்தான் இனிப் பேச்சுவார்த்தை என்கிறார்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## நிவாரணம் சீராக வழங்காத சங்கங்களுக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி எச்சரிக்கை

யாழ் குடாநாட்டில் நிவாரணமாக வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்களை குறிப்பிட்ட அளவில் சீராக வழங்காத பல நோ. கூ. சங்கங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் அறிவித்துள்ளனர்.

தீர்மானிக்கப்பட்ட தொகைப் பணத்துக்கான பொருள்கள் கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் தமக்

—04 ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் 32 வயதுடைய ஆண் ஒருவர் ஆண் குழந்தையைப் பிரசவித்த அதிசயச் சம்பவம் நேற்று நிகழ்ந்தது. இந்த ஆணின் மார்பகங்கள் பெண்களை ஒத்ததாகவும், பெண் உறுப்புடன் ஆண் உறுப்பும் இருந்ததாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித் — 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் மே மாதம் இரண்டாம் வாரத்தில்

தமிழ்நாட்டிற்கான சட்டப்பேரவை தேர்தல் மே மாத இரண்டாம் வாரத்தில் நடைபெறவுள்ளது.

பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தலுடன் தமிழக சட்டப்பேரவை தேர்தலும் நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையாளர் நேற்று அறிவித்தார்.

கடந்த ஜனவரி 31ஆம்

—04 ஆம் பக்கம் பார்க்க

பாதிப்படைந்தது;

முத்திரைச் சந்தியில் காத்திருந்த பலர் நேற்றுப் பிற்பகல் திரும்பிச் சென்று விட்டனர்.

## கொழும்பு பயணம் நேற்று இல்லை

நேற்று கொழும்புக்குச் செல்வதற்கான பூநகரி ஊடாக வவுனியாவுக்கான போக்குவரத்துச் சேவைகள் நடைபெறவில்லை.

இதனால் கொழும்பு செல்ல முத்திரைச் சந்தைக்கு வந்த பிரயாணிகள் தமது பயணத்தை தொடராது வீடு திரும்பிச் சென்றதைக் காண முடிந்தது. (33)

## வடபகுதிக்கு விரைவில் மின்சாரம் கிடைக்கும்?

வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான துரித நடவடிக்கையில் இலங்கை மின்சாரசபை ஈடுபடுவதாக மின்சாரசபை வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

கடந்த பத்து மாதங்களாக வடபகுதிக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டமையால் மின்சக்தி எரிபொருள் அமைச்சுக்கு பெருமளவு நட்டம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக மின்சக்தி எரிபொருள் அமைச்சுச் செயலாளர் கடந்தமாதம் பாதுகாப்பு அமைச்சுக்கு அடிதம் எழுதியது பற்றி மூர சொலி செய்தி வெளியிட்டிருந்தமை வாசகர் அறிந்ததே.

பாதுகாப்பு அமைச்சு இவ்விடயத்தில் சற்றுத்தளர்வைக் காட்டிவருதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை மின்சார சபையின் வடபகுதிப்

—04 ஆம் பக்கம் பார்க்க

★ 1990 ஆகஸ்ட்டுக்கு முந்திய வேலை ஒப்பந்தங்கள் யாவும் ரத்து

# குவைத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் இனிப் புதியவர்களாகவே கருதப்படுவர்!

வளைகுடா யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் குவைத்தில் பணிபுரிந்த வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அங்கு தற்போது தொடர்ந்தும் பணிபுரிவதாக இருந்தாலும் அவர்கள் புதியவர்களாகவே கருதப்படுவர் என குவைத் அரசு அறிவித்துள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட்மாதம் இரண்டாம் திகதிக்கு முன்னைய சகல வேலை ஒப்பந்தங்களையும் ரத்துச் செய்து விட்டதாக குவைத் அரசு அறிவித்து விட்டது.

இதனால் அங்கு மேற்கொள்ளப்படும் சகல நிருமாண,புனர் நிருமாண வேலைகளுக்குமான ஒப்பந்தங்களும் இனிப் புதிதாகவே வழங்கப்படவுள்ளன.

முன்னர் ஒப்பந்த வேலைகளைச் செய்த கம்பனிகள் மீண்டும் அதே ஒப்பந்த வேலையைத் தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படும் பட்சத்திலும் அவை புதிய ஒப்பந்தங்களாகவே கருதப்படுமெனவும் இதனால் அக் கம்பனிகளில் வேலை பார்த்த வெளிநாட்டுத் தொழிலாளர்கள் புதியவர்களாகவே கருதப்பட்டு, ஆரம்பச் சம்பளத்தைப் பெறவேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன் பல சலுகைகளையும் இழக்கவேண்டி ஏற்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (34)

## இறுதித் திகதி மேலும்நீடிப்பு

பொது எழுதுவினைஞர் சேவையின் முதலாம் வகுப்புக்கு பதவியுயர்த்துவதற்கு வழங்கப்பட வேண்டிய அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

பொதுநிருவாக அமைச்சின் 44—30ஆம் இலக்க சுற்று நிருபத்தின் 3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதற்கமைய இந்த விசேட அறிக்கைகள் இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

## முத்துமாரியம்மன் தொண்டர்சபை

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான தொண்டர் சபையினரின் முதலாவது ஆண்டு பொதுக்கூட்டம் கடந்த ஞாயிறு நடைபெற்றது.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:-ச. திருச்செல்வம் உப-தலைவர்:-நா. அருணகிரிநாதன் செயலாளர்:- இ. உதயசூரியன் உப- செயலாளர்:- வெ. கலையழகன் பொருளாளர்:- வ. துரைராசா. (ப-1)

## தவக்கால சிறப்பு நிகழ்ச்சியாக

திருமறைக் கலாமன்றம் வழங்கும்

**'சிலுவை உலா'**

பத்தி - இசை - உரை - நாடகம்

காலம்: பங்குனி 22. 23. 24-ம் திகதிகளில். (வெள்ளி, சனி, ஞாயிறு)

இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு 238, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

நேரம்: மாலை 6. 45 மணி

பிரவேசம்: இலவசம்.

ஆசனம் வேண்டுவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

03085

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## தெரிவுப் பரீட்சைகள்

பின்வரும் தெரிவுப் பரீட்சைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகளிலும், நேரத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

1) தொழிலாளர் கல்விப் பாடநெறி
23. 03. 1991 காலை 9. 00 மணி
2) அமய எழுதுவினைஞர்
24. 03. 1991 காலை 9. 00 மணி
3) அமய ஆய்வுகூடக் கவனிப்பாளர்
24 03. 1991 காலை 10. 00 மணி
4) அமய நூலக உதவியாளர்
24. 03. 1991 பிற்பகல் 2. 00 மணி

அனுமதி அட்டைகள் பற்றியோ, தேசிய அடையாள அட்டை பற்றியோ ஏதாவது பிரச்சினைகள் இருப்பின்,22 03 1991 வெள்ளி பிற்பகல் 4 00மணிக்கிடையில் பரீட்சைக் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்க.

## தமிழ் ஆலோசகர்களுக்குப் பயிற்சி

தமிழ்மொழிப் பாடஆசிரிய ஆலோசகர்களுக்கான பயிற்சி வகுப்புக்களை (ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரை) நடத்துவதற்குத் தேசிய கல்வி நிறுவனத்தின் தமிழ்மொழித் துறை தீர்மானித்துள்ளது.

இவர்களுக்கான வகுப்பு நடைபெறவுள்ள இடம் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும், தற்போது தமிழ்மொழி பாட ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்படாவிட்டால் உடனடியாக நியமனம் செய்து அவர்களுடைய விவரங்களையும் தமக்கு அனுப்பி வைக்குமாறும் தமிழ் மொழித்துறை பணிப்பாளர் கு. சோமசுந்தரம் கேட்டுள்ளார். (78)

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

16 03 91ஆம் திகதி வவுனியா செல்வநகரக் சைக்கிளில் சென்றசமயம் எனது பிரயாணப்பையை புளியங் குளத்திற்கும், ஓமந்தைக்கும் இடையில் தவறிவிட்டது அதில் எனது தேசியஅடையாள அட்டை, பாஸ்போட் (முஸ்லிம் பெயருடையது நிஸாயா) வங்கிப் புத்தகம் (இல 4653) காசோலை பணம், உடைகள் என்பன்இருந்தன கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் முகவரிக்கு அறிவிக்கும்படியும் அல்லது முரசொலி காரியாலயத்தில் ஒப்படைக்கும் படியும் கேட்டுக் கொள்கிறோம். (தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் ச.கனகலட்சுமி இல 337/7 தருமபுரம்.

03089

## களனியில் கள்ளச்சாராயம்

களனியில் மிகப்பெரிய கள்ளச்சாராயத் தொழிற்சாலையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இத்தொழிற்சாலையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போத்தல் கள்ளச் சாராயமும் விசேட சாராயம் தயாரிப்பதற்குரிய ஒவ்வொன்றும் 45 கலன் கொண்ட 35 பீப்பா ஸ்பிரிட்டும் மற்றும் விசேட சாராய லேபல்கள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இத்தொழிற்சாலை உற்பத்திகளின் விற்பனையால் அரசுக்கு பல லட்சம் ரூபா வருமானம் கிடைக்காமல் போனதாகவும் தெரியவந்துள்ளது.

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



தோற்றம் மறைவு

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: உதிர்வு:

21 — 03 — 1911



19 — 02 — 1991

### இராமநாதர் கதிரவேலு

அன்பிலே சிறந்தும் பண்பிலே உயர்ந்தும்
அறிவுடையோராய் வாழ்ந்தும் காட்டி
அமரத்துவம் அடைந்த உங்கள் ஆன்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

226, ஆனந்தநகர், கிளிநொச்சி,

இவரின் பிரிவால், துயருறும் அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

03090

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்: விண்ணில்:

06 — 05



24 — 03

பரீட்சைக் கிளை,
1991. 03. 20 03093

## விவசாய டிப்ளோமா

### ஒரு வருடகால இலவசப் பயிற்சி நெறி

போதிக்கப்படும் பாடங்கள் :-

மிருக பரிபாலனம், பயிர் வேளாண்மை, பூங்கனியியல், விவசாய மூலதத்துவங்கள், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் (ஆண்கள்) மனைப் பொருளியல் (பெண்கள்) ஆங்கிலம்.

தகைமை :- க. பொ. த. (சாதாரணம்) அல்லது தே. க. பொ. த. பரீட்சை சித்தியடைந்திருப்பதுடன் 30. 04 91 இல் வயது 16-25 இடைப்பட்டிருக்க வேண்டும்.

உதவு தொகை வழங்கப்படும்.
விருப்பமுள்ள இருபாலரும்

அதிபர்:-

**யாழ்ப்பாணக் கல்லூரி**
**விவசாய நிறுவனம்**

மருதனாமடம் சுன்னாகம்,
என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கலாம்

**விண்ணப்ப முடிவுத் திகதி: 15. 04. 91**

03101

04 — 11 — 1951



18 — 03 — 1989

## ச. புவனேந்திரராஜா

### திதி :- 21- 03- 1991

துரோகத்தால் வீழ்ந்துவிட்ட தூய உள்ளம்
தூய்மையும் வாய்மையுமே வாழும் இல்லம்
பரமபதம் என்றும் உம்மைக் காத்து நிற்கும்
பாரெல்லாம் உம் நினைவைத் தாங்கி நிற்கும்
அரவுயர்த்த ஆண்டவனின் அடியிற் சென்றீர்
அங்கிருந்து எம்மையெல்லாம் வாழவைப்பீர்
தரம் தாழா (து) வாழ்ந்திருந்து, வாழவைத்த
தந்தையே! தந்தையே!! எம்மைப்பாரீர்!!!

உங்கள் பிரிவால் வாடும்
தாய், சகோதரங்கள்,
மனைவி,
பிள்ளைகள்
மயூரன், மைதிலி,
செந்தூரன், கோகுலன்.

29 /1, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

03094

05 — 1988



03 — 1990

## தனுஷா தனையசிங்கம் (சிந்து)

(9ஆம் வட்டாரம் புங்குடுதீவு)

### சஷ்டி திதி: 21 - 03 - 1991

சிந்துவெனும் செல்லப்பெயர் சூடி நின்றாய்
தேசுலவும் தனுஷாவென் செல்வி நீயே!
வந்து பிறந் தேயிந்த வைய கத்தில்
வயது இரண் டாவதன்முன் வான கத்தை
சொந்தமென நீ தொடர்ந்து சென்றே விட்டாய்
சொல்லொணாத் துயரடைந்தோம் உன்னைப்பெற்றோர்!
இந்தவுல கத்தினிலே நீயிருக்க
யாம் கொடுத்து வைக்காத பாவி யானோம்!
அப்பா அம்மா அக்காமார் அண்ணன் மார்கள்
அப்பம்மா அம்மம்மா சின்னம்மா
பெரியப்பா மார் அன்பு மாமா மார்கள்
அத்தைமார்கள் அனைவருமே வருந்து கின்றோம்
புங்குடுதீவிற் பிறந்த பொன்னிலவே! சிந்து
அரியாலை யூரில் வளர்ந்து அமரத்துவம் அடைந்தது!

சங்கரட்ணம் வீதி,
அரியாலையூர்.

மாமா.
ப. தெய்வரூபலிங்கம்.

03092

★ ஜேர்மனியிலிருந்து வெளிவரும் 'கதிர்' சஞ்சிகை தகவல்

# ஐரோப்பிய நாடுகளில் வதியும் தமிழ் இளைஞர் இனப்பற்றை மறந்து தனிமை நாட முனைவு

ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற தமிழ் இளைஞர்களில் பெரும்பாலானோர் அங்கு மனிதக் கூலிகளாகவே வாழ்க்கை நடாத்துவதாக ஜேர்மனியிலிருந்து வெளிவரும் 'கதிர்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

'இலங்கையிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றோரில் அனேகமான தமிழ் இளைஞர்கள் 'கூட்டுதல்—கழுவுதல்' என சுருக்கமாகக் கூறப்படும் இரு துறைகளிலேயே தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர்'.

'இலங்கையில் உயர்கல்வி கற்று அங்கு சென்றோர்கூட தொடர்புகளுக்கு மொழி தடையாக உள்ளதனால் தங்கள் நாளாந்த வாழ்வைக் கொண்டுசெல்ல இந்த இரு துறைகளிலேயே வேலை வாய்ப்பைத் தேட வேண்டியவர்களாக உள்ளனர்'.

'இவர்கள் தம்மை இயந்திரமாக மாற்றி ஒருநாளைக்கு 16 மணி நேரம் உழைக்கின்றனர். இது ஐரோப்பிய முதலாளித்துவ அமைப்பின் உற்பத்திப் பெருக்கத்திற்கு உகந்ததாய் உள்ளதால் இலங்கைத் தமிழர்க்கு நல்ல வரவேற்பைத் தொழில் முதல்வர்கள் வழங்குகின்றனர்'.

'இதனால் இளைய தமிழ்ச் சமுதாயம் தனது அறிவு சார் வளர்ச்சியை இழந்து, மூளைப் பலத்தை இழக்கிறது. தொலைக்காட்சிப் பெட்டிகள், வாகனங்கள், நாளாந்த வாழ்வில இயந்திர உபயோகத்தை பெருக்கல் என்பவற்றையே ஐரோப்பா வாழ் தமிழ் இளைய சமுதாயமும் தனது பிரியமாகக் கொண்டு திகழ்கிறது.

'ஐரோப்பாத் தமிழர்கள் மனதில் ஒருவகையான 'தப்பியோடல்' (Escapism) மனப்பான்மை காணப்படுகின்றது. இலங்கைத் தமிழர் என்று சொல்வதை, இலங்கைத் தமிழருடன் சேர்வதை தவிர்த்து தமதுஇனச் சான்றைக் கூட மறக்க, மாற்ற அவர்கள் துடிக்கின்றனர்' என 'கதிர்' சஞ்சிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

## போராளிகள் உருவாக்கும் 'சுதந்திரசிலை'

கேள்வி: நமது போராளிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

பதில்: மண்ணையும், வியர்வையையும், குருதியையும் குழைத்து சுதந்திரச் சிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி: இன்றைய அரசியல் நிலை என்ன?

பதில்: மாட்சிமை தங்கிய ஒற்றைக்கண் சோல்பரி ஒற்றையாட்சியைத் தந்து போனார். அதுதான் இந்த ஓரவஞ்சக ஆட்சி.

நன்றி: சிரித்திரன்

## 500 ரூபா தாளுக்குப் பதிலாக நாணயத்தை மத்திய வங்கி வெளியிடும்

500 ரூபா தாளுக்குப் பதிலாக 500 ரூபா நாணயத்தை மத்திய வங்கி வெளியிடவுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் பத்து ரூபாவுக்கு மேற்பட்ட தொகை நாணயத்தில் வருவது இதுவே முதற்தடவை.

காலக்கிரமத்தில் 1,000 ரூபா நாணயத்தை வெளியிடவும் மத்திய வங்கி உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (16)

## சபாநாயகர் உறுப்பினர்க்கு உபதேசம்; 'அடிதடியில இறங்கி கேவலம் ஏற்படுத்தாதீர்'

ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் சபாநாயகர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வைத்து அறிவுரை கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் இனிமேல் அடிதடிகளில் ஈடுபடக் கூடாது. கேவலமான சம்பவங்கள் உள்ளே இடம்பெற எவரும் இனி இடங் கொடுக்கக் கூடாது. மக்களின் உண்மையான உறுப்பினர்களாக அனைவரும் நடந்து கொள்ள வேண்டும்" என சபாநாயகர் உறுப்பினர்களுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

## 1981 - 1988 காலப்பகுதியில்- இரு தமிழ்நாவல்களுக்கே சாகித்திய பரிசு

1981 ஆம் ஆண்டுக்கும், 1988 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இரண்டு நாவல்களுக்கு மட்டுமே இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்துள்ளது

1981 ஆம் ஆண்டிற்கான தமிழ் நாவலுக்கான பரிசு அமரர் கே. டானியலின் 'தண்ணீர்' என்ற நாவலுக்கும். 1983 ஆம் ஆண்டிற்கான பரிசு புலோலியூர் க. சதாசிவம் எழுதிய 'மூட்டத்தினுள்ளே' என்ற நாவலுக்கும் கிடைத்துள்ளது.

ஏனைய வருடங்களுக்கான தமிழ் நாவல்களுக்கான பரிசு அறிவிக்கப்படவில்லை. (50)

## ஆசிரியரல்லாத ஏனைய ஊழியரின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

கல்வித் திணைக்களங்களிலும், கோட்டக் கல்வி அலுவலகங்களிலும், பாடசாலைகளிலும் ஆசிரியரல்லாத ஊழியர்களான எழுதுநர், சிறுபணியாளர் பதவிகளுக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை கையெடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் அனுமதிக்கப்பட்ட தொகையையும், தற்போதைய நிரந்தர நியமனத்தால் வெற்றிடமாகியுள்ள தொகையையும் ஒவ்வொரு பதவிகளுக்கும் விவரமாகத் தரும்படி கல்விப் பணிப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (78)

## நூலகங்களை அமைக்க நடவடிக்கை

பண்டத்தரிப்பு கோட்டப் பிரிவில் உள்ள பாடசாலைகளில் நூலகங்களை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை உதவிக்கல்விப் பணிப்பாளர் ப. சண்முகராசா மேற்கொண்டு வருகிறார்.

இப்பிரிவில் நூலகங்களை இதுவரை ஆரம்பிக்காத பாட

## பாரிய நீர்ப்பாசன திட்டங்கள்-இனி மத்திய அரசின் நேரடிக் கண்காணிப்பில்

## திருமலையில் ஐவர் கைது

அரசியற் கண்ணோட்டம்:

## தமிழக தேர்தல் களம்

தமிழகத்தின் அடுத்த முதலமைச்சர் ஜெயலலிதாவா? கருணாநிதியா என்ற கேள்வி எங்கும் இப்போது அடிபடத் தொடங்கி விட்டது.

தேர்தல் களத்தில் தி.மு.கவிற்கும், அ.தி.மு.க - இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்குமிடையில்தான் நேரடிப்போட்டி. ஜெயலலிதா கருணாநிதியைச் சாடுவதும், கருணாநிதி ஜெயலலிதாவைச் சாடுவதும் தினசரி நிகழ்ச்சி.

சென்ற தேர்தலில் ஜானகி குழுவினர் ஜெயலலிதாவைத் தனிப்பட்ட முறையில் தாக்கினார்கள். அவரது சொந்த வாழ்க்கையை விமர்சித்தார்கள்.

ஆனால் கருணாநிதி பொறுப்புணர்ச்சியுடன் பேசுகிறார். கொள்கைகளை விளக்குகிறார். தமிழக அரசைக் கலைத்தது ஜனநாயக விரோதச் செயல் என்கிறார், அந்த அநீதியான செயலுக்கு அ.தி.மு.கவும், இந்திரா காங்கிரசுமே காரணம் என்கிறார். இந்தத் தேர்தலில் இவ்விடயம் முக்கிய அம்சமாகப் பிரதிபலிக்கும்.

### ஹரிஜனர்களின் ரட்சகர்

ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள், சிறுபான்மை மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோரது உரிமைகளுக்காகக் கருணாநிதி குரல் எழுப்புவார். வி.பி. சிங்கும் தனது தேர்தல் பிரசாரத்தில் பின்தங்கிய சகல வகுப்பினருக்காகவும் குரலெழுப்பி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கருணாநிதி ஆட்சியில் இருக்கும்போது ஆதிதிராவிடருக்காக 57,000 வீடுகள் கட்டத் திட்டமிட்டார். ஏற்கனவே பல ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு அவர்களிடம் கையளிக்கப்பட்டு விட்டன. அநேகமானோர் தாம் பெற்ற வீடுகளில் கருணாநிதியின் படத்தை மாட்டியுள்ளனர். சிலர் பூசை அறையிலும் வைத்துப் பூஜிக்கின்றனர்.

சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களின் ஆதரவு கருணாநிதிக்கு உண்டு என்றே கருத வேண்டும். ''அனைத்து இந்தியாவிலும் எங்களுடைய முதலமைச்சர் கருணாநிதிதான் ஒரு ஹரிஜனப் பெண்ணை மருமகளாகப் பெற்று இருக்கிறார். அவர் ஒருவர்தான் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த ஒருவரை நீதிபதி ஆக்கினார். அவர் இப்போது உயர் நீதிமன்ற நீதிபதியாக இருக்கின்றார். டொக்ரர் அம்பெத்காரின் நினைவாக ஒரு வீதிக்கு அவர் பெயரைச் சூட்டினார்'' இப்படித்துறையூர் முருகன் கூறுகிறார்.

''நாங்கள் ஏழைமக்கள் வீடுகளிலும் பின் தங்கிய சகல இனமக்கள் வீடுகளிலும் ஒளி ஏற்றியுள்ளோம், அதைச்சிலர் அணைக்க முயலுகின்றார்கள். அதற்கு ஒருபோதும் இடமளியோம்'' என்று கருணாநிதி ஆவேசமாகப் பேசிய கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஆதிதிராவிடர்களும் பின் தங்கிய மக்களும் குழுமியிருந்தனர்.

### கவர்ச்சி அரசியல்

ஜெயலலிதாவைப் பொறுத்தமட்டில் அவர் கொள்கைகளை நம்பவில்லை, அவர் தன்னையே நம்பி இருக்கிறார். தமக்கு இருக்கும் கவர்ச்சியே வெற்றியை ஈட்டித்தரும் என்ற அசையாத நம்பிக்கையுடன் இருக்கிறார். அவரிடம் நம்பிக்கை மட்டுமன்றித் துணிவும் இருக்கிறது. அரசியல் நெளிவு சுழிவுகளையும் நன்றாகக் கரைத்துக் குடித்திருக்கிறார்.

எம் ஜி ஆர். அப்போது என்ன செய்தாரோ அதை இப்போது ஜெயலலிதா செய்கின்றார். கருணாநிதியின் ஆட்களைத் தன்பக்கம் இழுக்க வலைவீசுகின்றார்கள். நாஞ்சில் மனோகரனுக்கும், ஆற்காடு வீராசாமிக்கும் தூது அனுப்பியிருக்கின்றார். இவர்களுடைய பலவீனம் அவருக்குத் தெரியும்.

### ஒரு டிக்கட் பத்து லட்சம்

அ.தி.மு.க சார்பில் வேட்பாளராக நிற்பதற்குப் பெரும் போட்டியும் இழுபறியும் நிலவுகின்றன. ஒரு தேர்தல் டிக்கெட்டுக்குப் பத்து லட்சம் என்று சொல்லப்படுகின்றது. இதைக் கொடுத்து வேட்பு மனுப் பெறத்துடியாய்த் துடிக்கின்றார்கள். 'அ.தி.மு.க கரை போட்ட வேட்டிக்கு இப்போது பெரிய டிமாண்ட்' ஏற்பட்டு விட்டது. தேர்தல் டிக்கெட் பெறவந்தவர்கள் சென்னையில் கட்சிக்கரை போட்ட வேட்டியைத் தேடி அலைகின்றனர்.

### ஜெயலலிதாவை மொய்க்கும் எறும்புகள்

## பாரிய நீர்ப்பாசன திட்டங்கள் இனி

## மத்திய அரசின் நேரடிக் கண்காணிப்பில்

நீர்ப்பாசனத் திணைக்கள மாவட்டக் காரியாலயங்களின் கீழ் இதுவரை காலமும் இயங்கி வந்த பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவும் இனிமேல் மத்திய அரசின் நேரடி கண்காணிப்பிலேயே இயங்குமென அறிய வருகின்றது.

இந் நடைமுறை ஏற்கனவே தென்பகுதியில் நடைபெறத் தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிய குளங்கள் யாவும் மாவட்ட அத்தியட்சகர்களினால் தொடர்ந்தும் பராமரிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாரிய பல நீர்ப்பாசனத் திட்டங்களும், சிறிய குளங்களும் பல்வேறு மாவட்டங்களில் கிராமிய ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் நீர்ப்பாசனத் திணைக்கள வட்டாரங்கள் மூலம் அறிய முடிகிறது. (ப-1)

## தாமதமின்றி ஓய்வூதியம் வழங்க அரசஅதிபரிடம் சங்கம் கோரிக்கை

யாழ் மாவட்ட ஓய்வூதிய காரர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தாமதமின்றி மாதாமாதம் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு யாழ் மாவட்ட அரச ஓய்வூதிய சங்கத்தினர் யாழ் அரச அதிபரைக் கோரியுள்ளனர்.

நேற்று முன்தினம் மேற்படி அமைப்பின் பிரமுகர்கள் அரச அதிபரை செயலகத்தில் நேரிற் சந்தித்து இக் கோரிக்கையை விடுத்தனர்.

யாழ் செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ள ஜனவரி மாத ஓய்வூதிய வவுச்சர்கள் தரம் பிரிக்கப்பட்டு ஒருசில நாட்களில் தபாலில் சேர்க்கப்படுமெனவும், நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்ட விசேடபடி ஜனவரி ஓய்வூதியத்துடன் வழங்கப்படுமெனவும் அரச அதிபர் அங்கு உறுதியளித்தார். (16)

## திருமலையில் ஐவர் கைது

திருமலையில் வைத்து ஐந்து ஜே. வி. பி. சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக அரசின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

பாளர் பி. சண்முகராசா மேற்கொண்டு வருகிறார்.

இப்பிரிவில் நூலகங்களை இதுவரை ஆரம்பிக்காத பாடசாலைகளில் நூலகங்களை ஆரம்பிக்கவும் நூலகங்கள் இருந்து தற்போது இயங்கா திருக்கும் நூலகங்களை மீண்டும் இயங்கச் செய்வதற்காகவும் நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (12)

## மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன?

ஒரு நாள் வீதியால் சவரிதம்பர் சென்றுகொண்டிருந்தார். அப்போது ஒரு மரத்துக்குப்பின்னால் ஐம்பது வயதான ஒருவர் ஒளிந்து கொண்டிருந்தார். ஏன் ஒளிக்கிறீர்? என்று கேட்டார் சவரித்தம்பர். அதற்கு அவர் எதிரே வந்துகொண்டிருந்த சுமார் எண்பது வயதான ஒருவரைக்காட்டி அவர் 'எனக்குப் படிப்பித்த வாத்தியார் அவரிடம் படிக்கும் காலத்தில் இருந்த பயமும், மரியாதையும் காரணமாக அவருக்கு முன் நான் போவதில்லை என்றார். 'சரி' என்று திரும்பிய சவரித்தம்பர் அதே மரத்தின் அடுத்த பக்கத்தில் சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருவர் ஒளிந்திருப்பதைக் கண்டார். அவரிடம் போய் நீர் ஏன் ஒளிந்திருக்கிறீர் என்று கேட்டார். அதற்கு அவர், என்னிடம் படிக்கும் மாணவன் வருகிறான் தெருவில் கண்டால் பட்டம் சொல்லிக் கூப்பிடுவான் என்று சங்கோஜத்துடன் கூறினார்.

நன்றி: சிரித்திரன்

டிமாண்ட் ஏற்பட்டு விட்டது. தேர்தல் டிக்கெட் பெறவந்தவர்கள் சென்னையில் கட்சிக்கரை போட்ட வேட்டியைத் தேடி அலைகின்றனர்.

## ஜெயலலிதாவை மொய்க்கும் எறும்புகள்

சர்க்கரையைஎறும்புகள்மொய்ப்பதுபோலஜெயலலிதாவை வேட்பாளர்களும், ஆதரவாளர்களும், உயர் அரச அதிகாரிகளும் வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும் சுற்றுகின்றார்கள். கடைசியாக வலம் வருபவர் குறுகிய காலம் பிரதமர் பதவியை வகித்த சந்திரசேகர். அவர் அ. தி. மு. கவுடன் இணைப்பை ஏற்படுத்தமுயன்றுவருகின்றார். ராஜீவ்காந்தியை ஜெயலலிதா முற்றும் முழுதாக நம்பவில்லை. சந்திரசேகருக்கு குழி தோண்டுவது போன்று தனக்கும் தோண்டக் கூடும் என மிக அவதானமாகவே செயற்படுகின்றார்.

சென்ற முறை போலல்லாது, இம்முறை ஜெயலலிதாவுக்கு ஜானகி அணியினரின் ஆதரவும் உண்டு.

ஜானகியைப் பொறுத்தவரை ஜெ-மீது மனதில் எவ்வளவு குரோதம் இருப்பினும் அதை வெளிக்காட்டுவதில்லை. ஜெயலலிதாவிற்கு ''நீ மகராசியாய் இருக்கணும், வெற்றிவாகை சூடணும்'' என ஆசி கூறியுள்ளார். இந்த ஆசி உதட்டில் இருந்து வந்ததா உள்ளத்தில் இருந்து வந்ததா? இறைவனுக்குத்தான் வெளிச்சம்!

## தி. மு. கவுக்கு உள்ள வாய்ப்பு

அ. தி. மு. கவில் தேர்தல் டிக்கெட்டுக்கு நிலவும் போட்டியும் ஆரவாரமும் தி. மு. க. வில் இல்லை. சென்ற முறை இருந்த உற்சாகம் இந்த முறை இல்லை.

கருணாநிதி ஆட்சியில் இரண்டாயிரம் பேர் பொலிஸ் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் எல்லாரும் உள்நாட்டுப் புலிகள் எனக்குற்றம் சாட்டியுள்ளார். வாழப்பாடி. தெரிவை ரத்துச்செய்யும்படி வற்புறுத்தினார். (கவர்னர் ஆட்சியென்றால் காங்கிரஸ் கட்சி தனது ஆட்சியென்று நினைப்பது வழக்கம்.) தெரிவுரத்துச் செய்யப்பட்டது. இரண்டாயிரம் குடும்பங்களும் குமுறுகின்றன. அவர்கள் எல்லோரும் தீவிர தி. மு. க ஆதரவாளர்களாகிவிட்டார்கள்.

4 ஆம் பக்கம் பார்க்க

### சில சட்டத்தரணிகளால்

## காணிப்பதிவு அலுவலகத்திற்கு காணி உறுதிகள் வரவில்லை

பலலட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகளைக் கொண்ட காணி உறுதி இணைப்பிரதிகளை இன்னும் குடாநாட்டிலுள்ள சில சட்டத்தரணிகள் காணிப்பதிவு அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கவில்லை எனத் தெரிய வருகிறது.

1989 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வரை எழுதப்பட்ட காணி உறுதிகளின் மூலப் பிரதிகள் இணைப்பிரதிகள் என்பவைவற்றை சமர்ப்பிக்குமாறு இவ்வலுவலகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தும் சிலர் இவற்றை இன்னும் ஒப்படைக்கவில்லை எனவும் இவ் வட்டாரத்திலிருந்து அறியப்படுகிறது.

இவ் உறுதிகளுடன் சம்பந்தப்பட்ட பொதுமக்கள் தமது உறுதிகள் பதியப்பட்டுள்ளவை என்பதை அறிய இவ் அலுவலகத்திற்கு சென்ற போதே இவ்வாறு உறுதிகள் சட்டத்தரணிகளால் அனுப்பி வைக்கப்படாமை தெரிய வந்துள்ளது.

இதேவேளை சில சட்டத்தரணிகள் வெளிநாடு சென்றுள்ளதாகவும் சிலர் கொழும்பில் நிற்பதாகவும் தெரிய வருகிறது. (77)

### உதவி அரச அதிபர்கள்

## கடும் பாதிப்புற்றோர் விவரம் அனுப்பி வைக்கக் கோரிக்கை

கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரணம் தொடர்பாக 1990 ஜூன் மாதத்திற்கு முன்னர் ஏற்பட்ட மரணம், ஊனம் தொடர்பாக யாழ் செயலகத்தால் 8000 விண்ணப்பத்திரங்கள் இணைப் பிரதிகளுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவென உதவ அரசாங்க அதிபர்களுக்கு வழங்கப்பட்ட போதிலும் இதுவரை 4500 விண்ணப்பங்களே புனர்வாழ்வுப் பிரிவுக்குக் கிடைத்துள்ளன.

மிகுதி 3500 விண்ணப்படிவங்களுக்கும் என்ன நடந்தது என்பது பற்றி செயலகத்திற்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இவை விண்ணப்பதாரர்களிடமோ, கிராம அலுவலர்களிடமோ அல்லது உதவி அரசாங்க அலுவலகங்களிலோ இருந்தால் அவற்றை உடனடியாகத் தமக்கு அனுப்பிவைக்கும்படி உதவி அரசாங்க அதிபர்களை யாழ் செயலக செயற்திட்டப் பணிப்பாளர் திரு எஸ். பத்மநாதன் கேட்டுள்ளார். (66)

## மரணச் செலவுத்தொகை பெற ஏப்பிரல் மாதம்வரை அவகாசம்

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதிக்குப் பின்பு வன்செயல் நடவடிக்கையால் மரணமடைந்து 3 மாதங்கள் பிந்தியதால் மரணச் செலவுத் தொகையான இரண்டாயிரம் ரூபாவைப் பெறத் தவறியவர்களுக்கு இதனைப் பெற மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை யாழ் செயலகம் வழங்கியுள்ளது.

இப் பணத்தைப் பெறாதவர்கள் இனாமாக வழங்கப்படும் மரண அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப் பிரதியுடன் செயலகப் புனர்வாழ்வுப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இச் சலுகை 30 4 1991 வரை மட்டுமே வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

01. 05. 91க்குப் பின்னர் மூன்று மாதகாலத்திற்குள் இதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனை கண்டிப்பாக அமுல் படுத்தப்படும் எனவும் செயற்திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (66)

### விடுதலைப்...

அரசுடனான பேச்சுகளில் கலந்து கொள்வது யார் என முடிவு எடுப்பது தாமே எனவும் தலைவர் பிரபாகரன் பேச்சுக்களில் கலந்து கொள்ளமாட்டார் எனவும் விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்

### மன்னிப்புச்சபை...

ஓர் பயங்கரவாத அமைப்பு என முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண அடிக்கடி கூறி வந்தமை

★ பாராளுமன்றத்தில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா

# கதிர்காம அழகிக்கு சிலைவைத்தவர்கள் ரிச்சர்ட் டீசொய்சாவுக்கு மௌனம்

1971ஆம் ஆண்டு கதிர்காமம் அழகி மன்னம் பெரியுவின் கொலையைக் கண்டித்த ஐ. தே. க. தலைவர்கள் அவளுக்காக மேடைகளில் முதலைக் கண்ணீர் வடித்தனர். கதிர்காமத்தில் சிலையும் திறந்தனர். ஆனால் ரிச்சர்ட் டீ. சொய்சாவின் மறைவுக்கு மௌனம் சாதிக்கின்றனர்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்: ஆயிரக் கணக்கான இளைஞர்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டு டயர் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர் இவர்களைக் கடத்தியவர்கள் யார் என்பது தெரியாது ஆனால், ரிச்சர்ட் டீசொய்சா அரச படையினரால் கடத்தப்பட்டது என்பது உலகம் அறிந்த விடயம் ரிச்சர்ட் டீ சொய்சாவின் மறைவு இங்கு மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் உணர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

சர்வதேச ஜூரர் சபையின் செயலாளர் நாயகம் இதனை ஐ நாவில் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்தின் 12 நாடுகள் இது குறித்து அறிக்கை விட்டுள்ளன அமெரிக்க செனற்றும் இதற்கு ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளது. பிரிட்டிஷ் கமன்ஸ் சபையின் 5 உறுப்பினர்கள் ஆணைக்குழு நியமிக்க தீர்மானம் கொடுவந்தனர்.

அன்று அழகி மன்னம் பிரிய மரணம் குறித்து திஸமகராகம ஆதரவாளர் என்னிடம் முறையிட்டனர். இப் பெண் பாலியல் வன்முறைக்கு உள்ளானார். நிர்வாணமாக வீதிகளில் நடத்தப்பட்டார் சுடப்பட்டு குறை உயிராக புதைக்கப்பட்டார். இதற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரியைக் கைது செய்ய உத்தரவிட்டேன். அவர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டார் சிறையில் இறந்தார்.

நான் எடுத்த நடவடிக்கையால் ஜே. வி. பி. இயக்கத்துக்கு எதிராக நாம் செயற்பட எங்களை விசாரிப்பதா? என்று இராணுவ அதிகாரிகள் கூறினார்கள் நான் சொன்னேன், "நானும் ஒரு பெண் இதனை என்னால் சகிக்க முடியாது" என்று குற்றவாளிகளைக் காப்பாற்ற முயலவில்லை.

சொய்சாவின் தாயார் தமது ஒரே மைந்தனின் கொலை பற்றி நேர்மையான பூரணமான ஒரு விசாரணை நடைபெற வேண்டும் எனக் கோரினார். அவர் கடத்தப்பட்டதும் பிரதி சபாநாயகர் கமினி பொன்சேகாவுக்கு தாயார் டாக்டர் மனோரி சரவணமுத்து முறையிட்டபோது "நீங்கள் நிம்மதியாக உறங்குங்கள் சொய்சா படையினரின் பாதுகாப்புடன் பத்திரமாக இருப்பார்" எனப் பதிலளிக்கப்பட்டது, இவ்வாறு அவர் கூறினார். (33)

## கிளிநொச்சி மாணவர்களுக்கு இலவசபாட நூல் கிடைத்தது

கிளிநொச்சியில் பாடசாலை மாணவர்களுக்கான பாட நூல் இலவசப் புத்தகங்கள் கொழும்பு அதிபரின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கல்விப்பணிப்பாளர் திரு க. கந்தசாமி எடுத்த நடவடிக்கையால் கப்பல் மூலமாக இவை கொண்டு வரப்பட்டுள்ளன.

பளை உதவி அரச அதிபர் பிரிவு தவிர்ந்த கிளிநொச்சி, பூநகரி, கண்டாவளை ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி தெரிவித்தார். (ப-6)

### நிவாரணம்...

குக் கிடைத்த பொருள்களின் அளவு, தொகை குறைவாகவே தரப்பட்டதாகவும் பாவனையாளர்கள் வி. பு. மக்கள் முன்னணியினருக்கு புகார் செய்துள்ளனர்.

தீவுப்பகுதிகளுக்கு பொருட்கள் எடுத்துச் செல்லும் போக்குவரத்துச் செலவு அதிகம் எனச் சாட்டுச் சொல்லி கூட்டுறவுச் சங்கங்கள் பொருட்களின் விலையை அதிகரித்துள்ளமையே பொருட்களைக் குறைத்துக் கொடுப்பதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது.

உதாரணமாக ஐந்து பேர் கொண்ட குடும்ப அட்டை ஒன்றுக்கு 10 கிலோ அரிசி வழங்கும் போது அதன் விலை 131 ரூபா 50 சதத்திற்குப் பதிலாக 142 ரூபா

### பணிப்பாளரின் முயற்சியால்

## யாழ் கல்வித்திணைக்களத்திற்கு 9 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ் மாவட்டத்திற்கு கல்வி அமைச்சு 89 இலட்சத்து 16 ஆயிரம் ரூபா பணத்தினை உடனடியாக வழங்கியுள்ளது. கல்விப் பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் எடுத்த முயற்சியால் இந்தப் பணம் கிடைத்துள்ளது.

இப் பணத்தில் இருந்து பண்டத்தரிப்பு, மருதனாமடக் கல்விக் கோட்டங்களைப் புனரமைத்தல், ஆசிரியாலசிய வகுப்பறைகளைக் கட்டுதல், இராணுவ நடவடிக்கையால் இடிபாடு அடைந்துள்ள அவசரக் கட்டிடங்களைப் புனரமைத்தல், தேசியபாடசாலைகளான யாழ் வேம்படி மகளிர் கல்லூரிக்கும், யாழ் இந்துக் கல்லூரிக்கும் தலா ஐந்து இலட்சம் ரூபா வீதம் பயன் படுத்துதல் என்பன உடனடியாக மேற்கொள்ளப்படவுள்ளதாகக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (32)

### யாழ்...

தன.

மண்டைதீவைச் சேர்ந்த இந்த நபர் 'பிரசவ வேதனை' யுடன் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்ட போது பெரியாஸ்பத்திரி வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இது போன்ற அதிசய சம்பவம்

### கல்விப் பணிப்பாளர் சொல்கிறார்

## இடம்பெயர்ந்த மாணவர் விசேட பரீட்சையில் தோற்றலாம்

யாழ் குடாநாட்டிலுள்ளும் ஏனைய வடபகுதியிலும் இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து வந்துள்ள சகல மாணவர்களும் எதிர்வரும் விசேட பரீட்சைகளில் கலந்து கொள்ள எவ்வித தடையுமின்றி இடமளிக்கப்படும் எனக் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பரீட்சைகளில் ஆள் மாறாட்டம், வேறு நேர்மையீனமான செயல்களைப் புரிவதற்கு யாராவது முயன்றால் அவர்கள் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் எனவும் அவர் சொன்னார்.

முன்னர் வேறு இடங்களில் பரீட்சை எழுதியவர்கள் திரும்பவும் விசேட பரீட்சை எழுத முனைதல் கண்டிப்பாகத் தடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இத்துடன் மன்னார், முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து வெளியேறியுள்ள மாணவர் நலன் கருதி இராணுவ நடமாட்டமற்ற பூநகரி, முழங்காவில், ஒட்டுசுட்டான், தருமபுரம் பகுதிகளிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார். (32)

## கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்களுக்கு இடநெருக்கடி

ளமாட்டார் எனவும் விடுத லைப் புலிகள் தெரிவித்திருப் பது இங்கு குறிப்பிடத்தக் கது.

என முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜே ரட்ன அடிக்கடி கூறி வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழக தேர்தல்...

தேர்தல் முடிந்து சட்டசபை கூடும் போது சட்டசபை அங்கத்தவர்களும், மந்திரிகளும் எந்த நேரத்திலும் எழும்பி ஓடுவதற்கோ அல்லது தற்பாதுகாப்பு நடவடிக்கையில் இறங்கு வதற்கோ தயார் நிலையில் இருப்பார்கள் என்பது மட்டும் உறுதி.

ஏனெனில் இம்முறை களத்தில் நிற்கும் மல்யுத்த வீரர் களும், கராட்டி வீரர்களும், குத்துச்சண்டை வீரர்களும்வாயால் பேச மாட்டார்கள். கைகளினால்தான் பேசுவார்களே!

ஜெயலலிதா அம்மையாரைப் பொறுத்தவரை எப் பொழுதோ துப்பாக்கி ரவைகள் துளைக்க முடியாத அங்கியை அணியத் தொடங்கி விட்டாராம்

சட்டசபையில் இனியும் ஒரு 'துகிலுரி' நாடகம் மேடை யேறாது என நம்பலாம்.

வி. பி.

## தவறிவிட்டது

மருதனாமடத்திற்கும் நாவற்குழிக்கு மிடையில் கோல்ட் நிறமுடைய சீக்கோ - 5 (ஆண்) கைக்கடி காரம் ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து முரசொலிக்காரியாலயத்தில் ஒப்படைக் கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 03098

வழங்கும் போது அதன் விலை 131 ரூபா 50 சதத் திற்குப் பதிலாக 142 ரூபா 50 சதம் அறவிடப்படுகிறது. இதேபோல மற்றைய பொருள்களின் விலையும் கூட்டி அறவிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் அக்குடும்பம் வாங்கும் 315 ரூபா பெறுமதி யான உலர் உணவுப் பொருள் களில் 17 ரூபா 50 சதம் மேல திகமாக சங்கங்களில் பெறப் படுவதுடன் இக்கணக்கின்படி இக்குடும்பம் 17 ரூபா 50சதம் பெறுமதியான பொருள்களை யும் குறைவாகவே பெறுவதா கவும் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

இது தொடர்பாக வி. பு. ம முன்னணியினர் சம்பந்தப் பட்ட உணவுத் திணைக்களத் துடன் விசாரணைகளை மேற்கொண்ட போது 9. 3 91 இல் இருந்து இக் குறைபாடு நிவர்த்திக்கப்பட் டுள்ளது என அறிவிக்கப்பட் டுள்ளது.

இவ்வாறுகுறைவாகபொருள் களைவழங்கிய சங்கங்கள் வி. பு. ம முன்னணியால் கடு மையாக விமர்சிக்கப்பட்டுள் ளதுடன் தொடர்ந்து இந் நடவடிக்கையில் ஈடுபட்டால் தண்டிக்கப்படுவார்கள் என வும் அவர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (66)

பட்டது.

யாழ்ப்பாணத்தில் இது போன்ற அதிசய சம்பவம் முன்னெப்பொழுதும் இடம் பெறவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

இவர் கர்ப்பம் தரித்த சூழ் நிலை பற்றி மருத்துவர்கள் விசாரித்த போது கடந்த வருடம் 50 வயதுடைய ஒரு வர் தம்மோடு உடலுறவு கொண்டதாக இவ்விளை ஞர் (?) தெரிவித்தார்.

இவரது குழந்தை பிறந்த சிறிது நேரத்தில் இறந்து விட்டது. (ப-11)

### தமிழ்நாடு...

தகதி தமிழகத்தில் கொண்டு வரப்பட்ட ஜனாதிபதி ஆட்சி எதிர்வரும் ஜூலை 29 ஆம் திகதியுடன் முடிவடைகிறது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

### வடபகுதிக்கு...

பிரிவு பல இடங்களில் அவசர திருத்த வேலைகளை மேற் கொண்டுவருகிறது.

வடக்கே மின்சாரம் வழங் கும் படி தொண்டர் நிறுவ னங்களும் அமைப்புக்களும் அரசை வற்புறுத்திவருவதாக கொழும்புச் செய்திகள் தெரி விக்கின்றன. (70)

## கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்களுக்கு இடநெருக்கடி

கிளிநொச்சியில் பாடசா லைகளில் போதிய இடவசதி யில்லாத நிலையில் மாணவர் கள் கல்வி பயிலும் நிலை தோன்றியிருப்பதாக கல்விப் பகுதி வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

இதேவேளை பன்முகப்ப டுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் தற்காலிக கொட்டகை அமைக்கப்படும் என கிளிநொச்சி அரசாங்க அதிபர் தே. மாணிக்கவாசகர் கல்வித்திணைக்கள திடம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் உப உணவுப் பயிர் செய்யவும் தாம் உதவி செய்வதாக அர சாங்க அதிபர் குறிப்பிட்டுள் ளார். (ப-6)

## தவக்கால ஆறாம் கிழமை இளவாலையில் திருநாள்

தவக்கால ஆறாம் கிழமை வியாகுல மாதா திருவிழா இம்முறையும் இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத் தில் நடைபெற உள்ளது.

11ஆம் திகதி ஞாயிறு முதல் மாலை 4. 30 மணிக்கு தினமும் தவக்கால ஞான ஒடுக்கம் நடைபெறுகிறது.

21ஆம் திகதி இன்று வியா ழன் மாலை 4. 30 மணிக்கு வியாகுல மாதா திருச்சுருப ஆசீரும், சுருபபவனியும் இடம் பெறும்.

22ஆம் திகதி காலை வியா குல மாதா திருநாட் கூட்டுத் திருப்பலியும் மாலை திருச் சிலுவைப் பாதையும் இடம் பெறும் என்று பங்குத்தந்தை அருட் திரு பீற்றர் துரைரட் ணம் அடிகள் தெரிவித்துள் ளார்.

### திருட்டு

அண்மையில் பூநகரியில் பல பகுதியிலும் நெற்களஞ்சியங் கள் திருட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

போர்களை இரவில் பிரித்து நெல்லை எடுத்துவிட்டு வைக் கலை அந்த இடங்களில் விட் டுச் செல்கின்றனர். (ப 35

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் டிற்காக திருவைத்தியரால் யாழ் ... 'லக்ஷ்மி பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 21 - 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.